பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஆவணி மீ 08 உ. வெள்ளிக்கிழமை (24 08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 03 கதிர்: 174

# ஊர்காவற்றுறையில் தொடர்ந்து கடும் மோதல்

## பொம்மர்கள், ஹெலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 24

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று முன்தினம் தரையிறங்கிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றும் தொடர்ந்து கடும் மோதல் நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினருக்கு உதவியாக நேற்று பொம்மர்களும், ஹெலிகளும் ஊர்காவற்றுறைப் பகுதியில் கடும் தாக்குதல்களை நடத்தின.

ஊர்காவற்றுறைப் பட்டினப் பகுதியில் நேற்று முன்தினம் நிலைகொண்டிருந்த இராணுவம், கிழக்குப் பக்கமாக— வேலணையை நோக்கி — முன்னேற முயற்சிப்பதாகவும் —

விடுதலைப் புலிகள் அவர்களை முன்னேற விடாது கடுமையாகத் தாக்கி வருவதாகவும் அங்கிருந்து நேற்றிரவு கிடைத்த செய்திகள் மேலும் தெரிவித்தன.

இராணுவப் படையினர்

(3ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், ஆக 24

ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம் பகுதிகளில் நேற்றும் ஹெலியில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டன.

இந்துக் கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் பாடசாலைகளில் பொதுமக்களைத் தஞ்சம் அடையுமாறு அந்தப் பிரசுரத்தில் கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## ஆனைக்கோட்டையில் ஹெலிதாக்கி இருவர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 24

ஆனைக்கோட்டை குருசு மதவடியில் நேற்றுக்காலை ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றை இலக்கு வைத்து ஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் வீதியால் சென்று கொண்டிருந்த சு. இராசம்மா (வயது 60) என்பவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த எஸ். டேவிட் (வயது 35) என்பவர் ஆபத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## நகருக்கு வந்த பொம்மர், ஹெலி

யாழ்ப்பாணம், ஆக 24

பொம்மர்களும், ஹெலிகளும் நேற்றிரவு யாழ் நகரை அடிக்கடி வட்டமிட்டபடி இருந்தன.

இடையிடையே அவை தாக்குதல்களையும் நடத்தின. சில பகுதிகளில் ''பரா'' வெளிச்சத்துடனும் தாக்குதல் இடம் பெற்றது. (ஒ)

# இறுதி முடிவு காணும்வரை யாழ். தாக்குதல் தொடருமாம்

## ஜனாதிபதி பணித்தாலே இடையில் நிறுத்தப்படும்

கொழும்பு, ஆக. 24

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக்குதல் ஒரு முடிவு காணப்படும் வரை தொடர்ந்து நடக்கும்.

அதனை அரைகுறையாக நிறுத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த நாட்டின் ஜனாதிபதி பணித்தால் மட்டுமே அது இடைநடுவில் நிறுத்தப்படும்.

இவ்வாறு உறுதியாகவும் ஆணித்தரமாகவும் நேற்றுத் தெரிவித்தார் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் நடக்கும் வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் வைத்து திரு. ரஞ்சன் இப்படிச்சொன்னார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊர்காவற்றுறையை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது.

மண்டைதீவில் இராணுவ நடவடிக்கைகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களை விமானப் படை நடத்தி வருகிறது. முக்கோணத் தாக்குதல்களை ஆயுதப்படைகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்துகின்றன.

### வெளியேற்றும் திட்டம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து மக்களை அகற்

(3-ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் இருந்து வானில் வந்த தீப்பந்தம்!

யாழ்ப்பாணம், ஆக. 24

யாழ். கோட்டைப்பகுதியில் இருந்து நேற்றிரவு நகரை நோக்கி — யாழ். இந்துக் கல்லூரிப் பக்கமாக தீப்பந்தம் ஒன்று வானில் ஆடி, அசைந்து பறந்து வந்தது.

நேற்றிரவு 7.20 மணிக்கு கோட்டை இராணுவ முகாம் பகுதியிலிருந்து பிரகாசமாகப் புறப்பட்ட அந்தத் தீப்பந்தம் 15 நிமிடங்கள் கழிந்து - சுமார் 7.35 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கு எதிரே ஒரு வர்த்தக நிலையம் ஒன்றின் மீது விழுந்து அணைந்தது.

துணியில் செய்யப்பட்ட தீப்பந்தம் ஒன்று கம்பி வளையம் ஒன்றில் வைக்கப்பட்டு பலூனின் உதவியுடன் காற்றில் அனுப்பப்பட்டிருந்தது.

இது குடிசைகள் மேல் விழுந்தால் தீப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. நேற்று இரவு தீப்பந்தம் வர்த்தக நிலையத்தில் சிமெந்து 'பிளாட்டில்' விழுந்ததால் விபரீதம் எதுவும் நிகழவில்லை. (ஒ)

## குடாநாட்டில் ஊரடங்கு தொடர்ந்து அமுலாகும்

### அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு

கொழும்பு, ஆக. 24

குடாநாட்டில் நேற்று முன்தினம் (புதன்) அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைக்கு அவசியம் எனக் கருதப்படும்வரை ஊரடங்கு தொடர்ந்து அமுல் செய்யப்படும் என்றும்—

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் ஊரடங்குச் சட்டம் தேவைப்படாது என அறிவிக்கும் பட்சத்திலேயே அதனை நீக்குவது குறித்து அறிவிக்கப்

(3-ஆம் பக்கம் பார்க்க)

# மிருசுவிலில் லொறி மீது நேற்று பொம்மர் றொக்கட் தாக்குதல்!

## பத்து வயதுச் சிறுவன் பலி; எழுவர் காயமுற்றனர்

மிருசுவில், ஆக. 24

மிருசுவில் ஆஸ்பத்திரி முன்பாக - லொறி மீது நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மாறி, மாறி நடத்தப்பட்ட பொம்மர் றொக்கட் தாக்குதலினால் சிறுவன் ஒருவன் பலியானான். மற்றும் சிறுவனின் தாய் உட்பட 7 பேர் படுகாயமடைந்தனர்.

நாரந்தனை மேற்கைச் சேர்ந்த விஜயரத்தினம் அபிமன்யு என்ற பத்து வயதுச் சிறுவனே ஹெலியின் றொக்கெட்டுக்குப் பலியானவராவார். அவரது தயாரான திருமதி ரட்ணகலா விஜயரத்தினமும் இச்சம்பவத்தில் படுகாய

(3-ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகம் தாக்குதலில் பிள்ளையார் ஆலயம் சேதம்

திருநெல்வேலி, ஆக. 24

மல்லாகம் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் [புதன்] மாலை நடந்த விமானக்குண்டுவீச்சுத் தாக்குதலில் மூவர் காயமடைந்தனர். மல்லாகம் சந்தியிலுள்ள பழங்கிணற்றடிப் பிள்ளையார் ஆலயமும் சேதமடைந்தது.

ஆலய வாசலில் தங்கியிருந்த மனநோயாளியான கட்டுவனைச் சேர்ந்த மகேஸ்வரி [வயது 50) மற்றும் இரு சிறுமிகளுமே காயமடைந்தவர்களாவர்.

ஆலயத்தின் மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் வியாழக்கிழமை முடிவடைந்ததை அடுத்து அன்று [illegible] அன்னதானமும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-143)

## புதன்கிழமை 150பேர் மட்டும்

சென்னை, ஆக. 24

கடந்த புதன்கிழமை இலங்கையில் இருந்து 150 தமிழ் அகதிகள் மட்டுமே இராமேஸ்வரம் போய்ச்சேர்ந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 87 ஆயிரத்தைத் தாண்டிவிட்டதாக [illegible] பி. எம். இராம்தாஸ் தெரிவித்தார். (இ-எ)

## காங்கேசனில் படையினர் இழப்புகளுடன் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஆக. 24

காங்கேசன்துறை இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் (புதன்) வெளியேற முற்பட்ட இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் மடக்கித் தாக்கி திருப்பி அனுப்பினர்.

இந்த மோதலின்போது படையினருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் சிறுப்பிட்டியைச் சேர்ந்த சேனாதி [செல்லக்கண்டு ரேகச்சந்திரன்] வீரமரணம் அடைந்தார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

பனந்திராந்தி, நிலை, கதவு யன்னல், அஸ்பஸ்ராஸ் சீற், கடை அலுமாரி, விறாக்கி, சோக்கேஸ், இரும்பு மேசை, கதிரை, மின்விசிறி, றேடியோ, ரீவி. டெக், வீட்டுப்பாவ னைப் பொருள்கள் மலிவு விலையில் கிடைக்கும். தனேந்திரன், காங்கேசன் துறை வீதி, 3 ஆம் கட்டை யடி, தாவடி. (13912)

10 x 8 இரும்பு சுருக்கு கதவு கல்வனைஸ் தகடு போட்டது புதியது அவ்ரி மேடைத் தராசு விற்பனைக்கு உண்டு. க. குணரெத்தினம், 7, கைலாசபிள்ளையார் கோயிலின் வீதி, நல்லூர். (13913)

### மலிவு விற்பனை

சிறுவர்களுக்கும், பெரிய வர்களுக்கும் மீரா வெளியீ டாக 1989 ல் 1990 ல் வெளி வந்த உயிரோட்டமான நாவல்கள் (31 ம் திகதிவரை) 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபா வுக்கு புத்தகங்கள் இலவச மாக வழங்கப்படுகிறது. ஸ்ரீ காந் புத்தகசாலை, நல்லூர் கோயில் முன்புறம் யாழ்ப் பாணம். (14085)

### தமிழ் மலரி சேவிஸ்

எமது சேவை குளப்பிட்டி வீதி உயரப்புலம் ஆனைக் கோட்டையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது என்பதை அனைவருக்கும் அறியத் தரு கிறோம். திருமணசேவை, காணி வாங்கல்- விற்றல், படம் வரைதல் போன்ற சேவைகள் நடைபெறுகின் றன. (14084)

### Dilka Watch Works

வெளி நாட்டில் இருந்து வந்த சிற்றிசன் and Digi (Temp) கடிகாரம் விற்ப னைக்கு. டில்கா வாச் வேக்ஸ் குளப்பிட்டி வீதி. உயரப் புலம், ஆனைக்கோட்டை. (14092)

### டில்கா வாச் வேக்ஸ்

எமது ஸ்தாபனம் தாக்கு தலிற்கு உள்ளானதால் உய ரப்புலம் குளப்பிட்டி வீதியில் தற்காலிகமாக இயங்குகின் றது. திருத்துவதற்கு தந்த உங்கள் கடிகாரங்களை உடன் வந்து பெற்றுக்கொள் ளவும். கடிகாரங்கள் திருத் திக் கொடுக்கப்படும் என்ப தையும் அறியத்தருகின்றோம். (14083)

### தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை கிருஷ்ண பாலன் அடையாள அட்டை தவறிவிட்டது. அராலிப் பாலத்தில் பையுடன் கிடைத் தவர்கள் க. கிருஷ்ணபாலன் 9ம் வட்டாரம், புங்குடுதீவு, என்ற முகவரிக்கு தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (13914)


## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 24 ஆனைக்கோட்டை வடக்கு ஸ்ரீ வரத விக்ன விநாயகர் ஆலய வருடாந்த மகோற் சவம் எதிர் வரும் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 3 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த் தத் திருவிழாவும் நடை பெறும். (இ - 113)




வீட்டுக்கு வீடு
வாழை விரும்பி நடுங்கள்
பூவும், காயும், கனியும்
ஊட்டம் தருவன-
மருத்துவப் பயனும் மகத்தானது.

குருமன் நோயிலிருந்து காப்பாற்றி
நற்பலன் பெற

அடிப்பசளையாக

★ நீமியா உரம் ★

பாவிக்கவும்!

1 கிலோ பக்கெற் ரூ. 5. 00
கூடிய தொகைக்குச் சகாய விலை.

மில்க்வைற் - யாழ்ப்பாணம். (சி-5177)


# கிளிநொச்சி நெல்லுக்கு விலை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை

## அரிசி விலை உயர்வைத் தடுக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஆக. 24 கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லை விற்பனை செய்ய விலை நிர்ணயம் செய்ய நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 5,000 ஏக்கரில் மேற்கொள்ளப் பட்ட நெற் செய்கையில் அறு வடை வேலைகள் நடைபெறு கின்றன.

யாழ்ப்பாணம், முல்லைத் தீவு பகுதியில் இருந்து செல் லும் வியாபாரிகள் வயல் களில் வைத்தே நெல்லைப் போட்டி போட்டுக் கூடிய விலை கொடுத்து வாங்கு கிறார்கள்.

இதனால் நெல்லின் விலை அதிகரித்து வருகிறது.

இதைக் தடுக்கும் நோக்கு டன் விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகக் கிளிநொச்சி செய லக அதிகாரி தெரிவித்தார். (இ - 5 - 3)

## நெடுந்தீவில் தேங்காய்க்கு தட்டுப்பாடு

நெடுந்தீவில் அடுத்து வரும் மாதங்களில் தேங்காய்க்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட லாம் என்று நம்பப்படுகிறது குறிகாட்டுவானுக்குத் தின மும் விற்பனைக்காக பெரும் மளவு தேங்காய் எடுத்துச் செல்லப்படுவதும் நெடுந் தீவில் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி அடைந்திருப்பதுமே இதற்குக் காரணம் ஆகும். (இ-111)

## வடக்கேவரும் வாகனங்கள் மதவாச்சியில் சோதனை

யாழ்ப்பாணம். ஆக. 24 கொழும்பிலிருந்து வடக்கே பொருள்களை ஏற்றி வரும் சகல வாகனங்களும் மதவாச் சிப் பொலீஸ் நிலையத்தில் வைத்து இராணுவத்தினரால் கடுமையாகச் சோதிக்கப்படு கின்றன.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று வருகின்ற லொறிகளும் மத வாச்சியில் நிறுத்தப்பட்டு சகல பொருள்களும் இறக்கப் பட்டு சோதனை இடப்படு கின்றது.

பெற்றோல், டீசல், மண் ணெண்ணெய், பற்றறி, தீப் பெட்டி போன்ற பொருள் களை வவுனியா வரைக்குமே கொண்டுவர அனுமதிக்கப் படுகிறது. அதுவும் குறிப் பிட்ட அளவு பொருள்க ளையே கொண்டுவரமுடியும். (இ-5-3)

## போதிய உதவிகள் இன்றி கிளாலிப் பகுதி அகதிகள்

கிளாலிப்பகுதியில் உள்ள பாடசாலைகள், தேவாலயங் களில் சுமார் 500 குடும்பங் களைச் சேர்ந்த இரண்டாயி ரத்துக்கும் மேற்பட்ட அகதி கள் தங்கி உள்ளனர்.

மன்னார், வவுனியா, திரு மலை மாவட்டங்களில் இருந் தும் யாழ். மாவட்டத்தின் குருநகர், வயாவிளான், யாழ்ப்பாணம், மயிலிட்டி, ஊர்காவற்றுறை பகுதிகளில் இருந்தும் இவர்கள் இடம் பெயர்ந்து வந்துள்ளனர்.

போதிய உதவி இன்றி இவர்கள் கஷ்டப்படுகின்ற னர் என்று தெரிவிக்கப்படு கிறது. [இ.117]

## கட்டாக்காலி ஆடுகள்

வல்வெட்டித்துறை, ஆக. 24 வல்வெட்டித்துறை நெடிய காட்டுப் பகுதியில் கட்டாக் காலி ஆடுகளின் தொல்லை அதிகரித்து வருகிறது. (இ - 160)

## துப்பாக்கிகள்

கொழும்பு, ஆக. 24 வவுனியா மாவட்டத்தில் எல்லைப் புறத்தில் வசிக்கும் மதவாச்சி மக்களுக்கு பாது காப்புக்காக வழங்கப்பட்டி ருந்த துப்பாக்கிகள் ஜே. வி. பி. யின் அச்சுறுத்தல் காரண மாக மீளப்பெறப்படுகின் றன. (இ-5-3)

## ஒக்சிஜன் சிலிண்டர்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஆக. 24 யாழ். போதனா வைத்திய சாலைக்கு ஒக்சிஜன் சிலிண் டர்களும் கப்பலில் வந்துள் ளன.

வெள்ளியன்று வந்த கப்ப லில் போதனா வைத்திய சாலைக்கு 15 ஒக்சிஜன் சிலிண்டர்கள், எக்ஸ் - றே பிலிம், விசர்நாய் தடுப்பூசி உட்பட பல மருந்துப் பொருள்களும் வந்துள்ளன. (ஓ-3-5)

## சகோதரிகள் மரணம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 24 கடந்த வெள்ளிக்கிழமை எழுதுமட்டுவாள் சந்தியில் பொம்மரிலிருந்து ஏவப்பட்ட றொக்கட்டுக்கு வசந்தி யோசப் (வயது 17) வதனி யோசப் (வயது 13) ஆகிய இரு சகோதரிகள் பலியானார் கள்.

அதே தினம் இயக்கச்சியில் இடம் பெற்ற றொக்கட் தாக்குதலில் சலூன் கடை உரிமையாளர் ஒருவர் கொல் லப்பட்டார். இருவர் காய மடைந்தனர். (இ - 117)

## புத்தக அட்டைகளுக்குள் ரூ. 40 கோடி போதைவஸ்து

சென்னை, ஆக. 24 புத்தகம் ஒன்றின் அட்டை களுக்கு இடையில் மறைத்து வைத்து கடத்த முயன்ற பெறுமதிமிக்க போதைவஸ் துவை சென்னை மீனம்பாக் கம் விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் கண்டுபிடித் தனர்.

இந்தப் போதை வஸ்துவின் பெறுமதி இந்திய பணத்தில் 20 கோடி ரூபாவுக்கு மேற் பட்டதாகும் (இலங்கைப் பணத்தில் 40 கோடிக்கு மேல்) எனத் தெரிவிக்கப்பட்டது.

இக் கடத்தல் முயற்சி தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டனர். (ஓ-ஏ)


## 4 ஆம் ஆண்டு இதய அஞ்சலி

திரு.
சண்முகசுந்தரக் குருக்கள் சூரியகுமாரன்
(முன்னாள் யாழ். ஹற்றன் தேசிய வங்கி முகாமையாளர்)

அன்னையின் மடியில்: 20 - 11 - 1952
ஆண்டவன் இணைப்பில் 24 - 08 - 1986

அடக்க மொடன்பும் கொண்டாய்
அவனியோர் போற்ற வாழ்ந்தாய்
இடர்பலகழைந் தனைவர் கென்றும்
இனியவை செய்து வந்தாய்
படர்கொடி பாமாதன்னை துணையென
பற்றிடும் வேளை தன்னில்
விட மென வந்தெவெல் ஓன்தன்
வாழ்க்கைப் படகினைச் சிதைத்ததன்றோ!

நினைந்து நினைந்துருகும்
அம்மா, அண்ணன்,
சுற்றத்தார், நண்பர்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [14095]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வே. இராசநாயகம் (குழந்தைவேல்)

தோற்றம்: 05 - 03 - 1926
மறைவு: 24 - 08 - 1989

எமக்கெல்லாம் நல்வழி காட்டி காலமெல்லாம் எங்கள் குடும்பத்திற்கு ஒளி விளக்காய் இருந்த எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை விட்டு ஒரு வருடம் சென்றாலும் உங்கள் நினைவு என்றும் நீங்காது.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். [14076]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரதீவுப் பாலப் பகுதியில் ஹெலி சுட்டு பலர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 24

கேரதீவுப் பாலப் பகுதியில் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஹெலித்தாக்குதலில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

அவர்கள் உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரான, அரியாலை கிழக்கு பூம்புகாரைச் சேர்ந்த ப. இராசசிங்கம் [வயது 26] என்பவர் படுகாயமடைந்த நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். [இ - 5 - ரி]

# மணியம் தோட்டத்தில் 6 பேர் காயமடைந்தனர்

நேற்று முன்தினம்காலை 10 மணியளவில் யாழ். மணியந்தோட்டப் பகுதியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் 6 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். (இ-5-ரி)

# கூட்டணி தூதுக்குழு ஜனாதிபதியை சந்தித்தது

கொழும்பு, ஆக. 24

வடக்கில் கண்மூடித்தனமாகநடத்தப்படும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு ஒன்று கடந்த புதன்கிழமை மாலை ஜனாதிபதியைச் சந்தித்து, தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொண்டது.

இது குறித்து முப்படைகளின் தளபதிகளை [வியாழன்] சந்தித்து பேசும்படி தூதுக்குழுவினரை கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, தாமும் அவர்களுடன் இது பற்றி பேசுவதாக உறுதியளித்தார்,

கூட்டணித் தூதுக்குழுவில் திரு. எம். சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன், திரு. மாவை சேனாதிராஜா, திரு. வீ. ஆனந்தசங்கரி, டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு. சிவபாலன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். [இ-எ]

# மிதி வெடியிலிருந்து தப்ப புதிய சப்பாத்து கண்டுபிடிப்பாம்

கொழும்பு, ஆக. 24

மிதிவெடிகளில் இருந்து இராணுவத்தினரைக் காப்பாற்ற இலங்கை விஞ்ஞானி ரி. சுமணசேகரா புதிய ரக சப்பாத்து ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது,

இச் சப்பாத்துக்களில் 500 ஜோடிகளை இலங்கை இராணுவத்துக்கு திரு. சுமணசேகரா இலவசமாக வழங்கப் போவதாகஅறிவித்திருக்கிறாராம்;

சப்பாத்துக்களின் தரம் குறித்து இராணுவ அதிகாரிகள் திருப்தி தெரிவித்தனர் என்றும் —

விடுதலைப்புலிகள் வைக்கும் மிதி வெடிகளில் சிக்கி இராணுவத்தினரில் அதிகமானோர் உயிரிழப்பதையும் காயமடைந்துவருவதையும் தடுக்குமுகமாகவே புதிய சப்பாத்து கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

யாழ், கோட்டை:

# புலிகள் விலகிக் கொண்டால் படையினர்வெளியேறுவராம்

கொழும்பு, ஆக. 24

யாழ். கோட்டை இராணுவ முகாமை விலக்கிக் கொள்ள அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நிபந்தனை விதித்திருக்கிறார்.

கோட்டை முகாமின் சுற்றுவட்டாரத்தில் உள்ள நிலைகளில் இருந்து விடுதலைப் புலிகள் விலகிக் கொள்ள வேண்டும் என்றும் —

இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே யாழ். கோட்டை இராணுவ முகாமை அரசு அகற்றும் என்றும் அமைச்சர் விஜேரத்தினா தெரிவித்துள்ளார்.

நிபந்தனையை ஏற்று கோட்டைச் சுற்று வட்டாரத்தில் இருந்து விலகிய விடுதலைப் புலிகள் கோட்டையைப் பிடிக்க மீண்டும் முயற்சித்தால், இலங்கை அரசுப் படைகள் கோட்டையை குண்டு வீசித்தாக்கும் என்றும் அமைச்சர் விஜேரத்தினா தெரிவித்தார்.

வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் பேசுகையில் அமைச்சர் இது பற்றிக் கூறினார் என்று ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-எ)

காணாமற் போன

# இந்திய கடற்படைக் கப்பல் மூழ்கிவிட்டதாக அறிவிப்பு

கொந்தளிக்கும் கடலில் சிக்கி காணாமற்போனதாகக் கருதப்பட்ட இந்திய கடற்படைக்கப்பல் 'ஐ. என். எஸ். அந்தமான்' மூழ்கி விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலுடன் மூழ்கிய 3 அதிகாரிகளையும் 15 கடற்படை வீரர்களையும் கண்டுபிடிக்கும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கப்பல் கப்டன் உட்பட 117 மாலுமிகள் காப்பாற்றப்பட்டனர்,

கப்பல் காணாமல் போனதற்கு சதிச்செயல் காரணமா என்பது குறித்து விசாரணை நடத்த உயர் மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. [இ-எ]

### வங்கி கீழ் மாடியில்

பச்சிலைப்பள்ளி, ஆக. 24

சாவகச்சேரி நவீன சந்தையின் மேல்மாடியில் இயங்கி வந்த மக்கள் வங்கிக் கிளை தற்போது நவீன சந்தையின் கீழ் மாடியில் இயங்கி வருகிறது. (இ - 117)

### செல்வச் சந்நிதி கொடியேற்றம்

வல்வெட்டித்துறை, ஆக. 24

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (இ - 160)

## ரூ. 35 செலவில் தே. எண்ணெய்

வல்வெட்டித்துறை, ஆக. 24

ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் 65 ரூபாவாகவிற்கப்படுவதை அடுத்து இப்பகுதி மக்கள் தேங்காய்ப் பாலிலிருந்து தேங்காய் எண்ணெயைத் தயாரித்து வருகின்றார்கள். 35 ரூபா செலவில் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய்யைக் காய்ச்சி எடுக்க முடிகிறது என்று கூறப்படுகின்றது. (இ - 160)

## சவூதி மீது ஈராக் குற்றச்சாட்டு

பக்தாத், ஆக. 24

சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான இரண்டு போர் விமானங்கள் தனது ஆகாய எல்லைக்குள் ஊடுருவல் செய்ததாக ஈராக் அரசு நேற்றுக் குற்றஞ்சாட்டியது.

வளைகுடா நெருக்கடி ஆரம்பமான பின்னர், இன்னொரு நாட்டின் ஊடுருவல் குறித்து ஈராக் உத்தியோகபூர்வமாகக் குற்றஞ் சாட்டியது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இக் குற்றச்சாட்டை சவூதி அரேபிய அரசு நேற்று மறுத்தது. (இ - எ)

## இலங்கைப் பெண்கள் திரும்பினர்

கொழும்பு, ஆக. 24

குவைத்தில் பணிபுரிந்த 200 இலங்கைப் பெண்கள் கடந்த புதன்கிழமை கட்டுநாயக்கா விமானநிலையம் வந்து சேர்ந்தனர். [இ-எ]

## வேலை இன்றி 8 லட்சம் பேர்

கொழும்பு, ஆக. 24

இலங்கையில் தற்சமயம் 8 லட்சம் பேர் வரையில் வேலையின்றி இருக்கின்றனர் என ஜனாதிபதி பிரேமதாஸ அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். (இ - எ)

### அரச ஊழியருக்கு இலவச சிகிச்சை

கொழும்பு, ஆக. 24

ஆண்டுக்கு ஒரு முறை அரசு ஊழியருக்கு இலவச வைத்திய சிகிச்சை அளிக்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்த அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ - எ)

## தனங்கிளப்பில் றொக்கட் தாக்குதல்

சாவகச்சேரி நகரப் பகுதியை கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டமிட்ட பொம்மர் தனங்கிளப்பு வீதியில் றொக்கட் தாக்குதல் நடத்தியது.

ஒரு குண்டு கண்ணாடிப் பிட்டி மயானத்தில் விழுந்து வெடித்தது. மற்றக் குண்டு சேற்றில் புதைந்ததால் வெடிக்காத நிலையில் இருந்து விடுதலைப் புலிகளால் அகற்றப்பட்டது. (அ-117)

### பஜனை வழிபாடு

நாட்டில் அமைதியும், சுபீட்சமும், சமாதானமும் நிலவவேண்டி உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் ஆலய உற்சவகாலங்களில் தினமும் 30 நிமிடங்களுக்குப் பஞ்சாட்சர நாம பஜனை வழிபாடு நடைபெறுகிறது. (இ - 160)

# சென்னையில் ஈழத்தமிழர் நேற்று உண்ணாவிரதம்

இந்திய அரசிடம் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழர்கள் நேற்று சென்னை 'பனகல் பார்க்' பகுதியில் அடையாள உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொண்டனர்.

ஆயிரக் கணக்கான மக்கள் இந்த உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

● ஈழத் தமிழ் பகுதிகளில் ஸ்ரீ லங்கா விமானப்படை மேற்கொள்ளும் வான் தாக்குதல்களை உடனடியாக

[4ஆம் பக்கம் பார்க்க]

## ஆனைக்கோட்டை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் வீதியில் நின்ற பசுமாடு ஒன்றும் இறந்தது. (இ-113-5-ரி)

## மிருசுவிலில் லொறி மீது...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்றார்.

இவரது மற்றொரு மகனான கவாஸ்கர் (4 வயது) காயம் ஏதுமின்றி தப்பிவிட்டார். இந்தச் சிறுவன் மிருசுவிலேயே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் காயமுற்ற ஏனையோர் வருமாறு:-

இராசசிங்கம் சிவமணிதேவி [வயது 55] நல்லூர்.

குலசேகரம் முத்துராசா [வயது 25] இறந்த சிறுவனின் உறவினரான இவர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை (கைதடி மேற்கு)

நடராசா இரட்ணதுரை (நீர்வேலி வடக்கு), மற்றும் சிலர் சிறுகாயங்களுக்கு இலக்காகினர்.

வவுனியாவில் இருந்து பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த லொறிமீதே பொம்மர் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்-

சங்கானையைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான இந்த லொறியில் கொழும்பில் இருந்துவந்த சிலரையும் சாரதி ஏற்றி வந்ததாகவும்

அப்பொழுது மிருசுவிலில் வைத்து இந்தத் தாக்குதல் இடம் பெற்றது என்றும் தெரிய வந்தது.

பொம்மரைக் கண்டவுடன் லொறியையும், அதில் வந்த பயணிகளையும் ஆபத்தில் கைவிட்டு விட்டு சாரதிஓடித் தப்பி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## ஊர்காவற்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேறுவதற்கு வசதியாக — அவர்களைத் தடுத்துநிறுத்தும் விடுதலைப் புலிகள் மீது — பொம்மர்களும் ஹெலிகளும் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருவதாகவும்—

கடலில் இருந்தும் குடிமனைப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—

படையினரின் வான் மற்றும் கடல் மார்க்கத் தாக்குதல்களினால் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டது, (உ-5)

## இறுதி முடிவு காணும்வரை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த நாம் நினைக்கவில்லை. அதனால் அதைக் கைவிட்டதாகவும் அர்த்தம் இல்லை.

குடாநாட்டை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதில் உள்ள தடைகள் நீங்கி விட்டால் மக்களை வெளியேற்ற வேண்டிய அவசியம் இருக்காது.

வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

ஊர்காவற்றுறை பகுதியில் இருந்து போராளிகள் விரட்டப்பட்டு உள்ளார்கள்.

யாழ்ப்பாணம் கோட்டை முகாம் பகுதியில் இருந்தும் போராளிகள் விரைவில் விரட்டியடிக்கப்படுவார்கள்.

ஏற்கனவே வகுத்த திட்டத்தின்படி அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

வடக்கை நோக்கி முன்னேறி வரும் இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தடுத்து நிறுத்தி விட முடியாது.

இறுதிவரை இராணுவத்தினர் போராடுவார்கள்.

### பேச்சுக்குத் தயார்

தற்போதைய நிலைமையிலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் முன்னர் விடுத்த கோரிக்கை செல்லுபடியானது.

பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி அசையாத நம்பிக்கை வைத்துள்ளார்.

### யாழ். ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை மீண்டும் திறப்பதற்கு மாற்று வழிகள் எதுவும் இல்லாத காரணத்தினால் பாரிய இராணுவத் தாக்குதலை நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எந்த ஒரு கட்டத்திலும் யாழ் வைத்தியசாலையை மூடிவிடுவதற்கு அரசாங்கம் விரும்பியதில்லை. ஆனால் அங்குள்ள சீரற்ற நிலைமையால் வைத்தியர்கள் சேவையாற்ற முன்வரவில்லை.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஜெனிவாவில் இருந்து இங்கு வந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவருடன் இரண்டு வாரங்களுக்கு முன்னர் என்னை சந்தித்து யாழ். ஆஸ்பத்திரி நிலைமை பற்றி பேசினர்.

யாழ். கோட்டை, ஆஸ்பத்திரி ஆகியவற்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பொறுப்பில் விடும் யோசனையைத் தனிப்பட்ட முறையில் நான் தெரிவித்தேன்.

அது பற்றி ஜெனிவாவில் உள்ள தங்கள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு முடிவைத் தெரிவிப்பதாக அவர்கள் கூறினார்கள்.

யாழ். ஆஸ்பத்திரியை அவர்கள் பொறுப்பேற்று நடத்தத் தயாராக இருப்பதாகக் கூறும் முடிவு நேற்றுத்(புதன்கிழமை) தான் வந்தது.

ஆனால் அரசு, யாழ். கோட்டை சம்பந்தமான இராணுவ திட்டங்களை அப்போது தீர்மானித்து இருந்தது - இப்படி ரஞ்சன் சொன்னார்.

விமானத் தாக்குதல்களின் போது சிவிலியன்களுக்கும் உயிரிழப்பு ஏற்பட்டதை அமைச்சர் நேற்று ஒப்புக் கொண்டார். (அ-எ)

## குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் என்றும் - அமைச்சர் விஜேரத்தினா மேலும் சொன்னார்;

இதேவேளை—

குடாநாட்டில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் (புதன்) அரசின் தொலைத் தொடர்பு சாதனங்கள் எதுவும் "வாய்" திறக்கவில்லை.

நேற்றைய தினமே அமைச்சர் ரஞ்சன் செய்தியாளர்களிடம் ஊரடங்கு பற்றிப் பிரஸ்தாபித்தார். (ஒ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விமானங்கள் தாழப் பறந்து ஊரடங்கை அமுல் செய்தன

## சில இடங்களில் தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஆக. 24

குடாநாட்டில் நேற்றும் விமானங்களும், ஹெலிகளும் தாழப்பறந்தும் தாக்குதல் நடத்தியும் மக்களைக் கலைத்தன.

ஊரடங்கு உத்தரவு புதன் கிழமை அறிவிக்சப்பட்டிருந்த போதிலும் நேற்றுக்காலை ஏராளமான மக்கள் வீதிகளில் பொருள்களை வாங்கத் தமது வீடுகளுக்கு மிசச் சமீபமாக உள்ள கடைகளுக்கு வந்திருந்தனர்.

விமானங்கள் குறிப்பாக மக்கள் கூடும் சந்தைப்பகுதிகள், கடைத்தெருப் பகுதிகள் ஆகியவற்றில் தாழப் பறந்ததையும், தாக்குதல் நடத்தியதையும் நேற்று அவதானிக்க முடிந்தது.

### சந்தைகள் மீது தாக்குதல்கள்

இதேவேளை —

நேற்று முன்தினம் திருநெல்வேலி, இணுவில், மருதனாமடம், சுன்னாகம், கல்வியங்காடுமற்றும் பல சந்தைகூடும் இடங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன.

இதனால் சந்தைகள் வேறு இடங்களில் நேற்றுக் கூடியிருந்தன. [இ - 5 - 143 - ரி]

## பரா வெளிச்சத்துடன்

# கட்டுவன், ஏழாலை பகுதிகளில் விமான, ஹெலி தாக்குதல்கள்

திருநெல்வேலி, ஆக. 24

கட்டுவன், ஏழாலை, குப்பிளான், மயிலிட்டி பகுதிகளில் நேற்று முன்தினம் (புதன்) இரவு 8.30 மணியளவில் — சுமார் ஒரு மணி நேரம் குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல்களை நடத்தின.

''பரா'' வெளிச்சக் குண்டுகளின் உதவியுடன் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சேத விவரங்கள் பற்றித் தெரிய வரவில்லை.

அதேவேளை பலாலிப் பகுதியில் இருந்து இப்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலும் இடம் பெற்றன. (ஒ-143)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி

## தேவமதி [துஷிதா] மகாதேவன்

[மாணவி, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம், ஆங்கிலம்]

நல்லூர், இல. 95, கோவில் வீதியை வசிப்பிடமாக கொண்ட செல்வி தேவமதி (துஷிதா) மகாதேவன் 21-08-1990 இல் கொழும்பில் காலமானார்.

இவர் செல்லையா மகாதேவன் (இளைப்பாறிய உதவி விரிவுரையாளர், கொழும்பு மருத்துவ பீடம்), மகாதேவன் காந்திமதி ஆகியோரின் அன்பு மகளும், தேவகுமார் (இந்தியா), தேவகாந்தன், தேவகாந்தி ஆகியோரின் அருமைத் தங்கையும், சங்கீதபூஷணம் சந்திரசேகரம் (சரவணை), திரு. திருமதி முருகேசபிள்ளை (ஆசிரியர்), திரு. திருமதி கணேசலிங்கம் (வர்த்தகர், நல்லூர்), திரு. திருமதி இராசதுரை (அச்சுவேலி), திரு. திருமதி சுந்தரலிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் பருமகளும், திரு. திருமதி விமலநாதன் (வேலணை) அவர்களின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 23-08-1990 இல் கொழும்பில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

நல்லூர்.

[13916]

தகவல்:

பே. கணேசலிங்கம்

## திருமதி

## மகேஸ்வரி செகராஜசிங்கம்

அத்தியடியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி செகராஜசிங்கம் 23-08-1990 அன்று சிவபதமெய்தினார்.

அன்னார் திரு. செல்லையா செகராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், இராஜலட்சுமி [ஆசிரியை யாழ். மத்திய கல்லூரி], விஜயலட்சுமி [ஆசிரியை, அரியாலை, ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்], பாக்கியலட்சுமி [ஆசிரியை, யாழ். கனகரத்தினம் ம. வி.], ராஜநாயகம் [சவூதிஅரேபியா], சுசீலாதேவி [ஆசிரியை மன் / முருங்கன் ம. வி.], நளாயினி [ஜேர்மனி], ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை [புவியியற்றுறை, யாழ்.பல்கலைக் கழகம்], திரு. சபாரத்தினம் [D.O.A., கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்], திரு. கனகரத்தினம் [நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம்], திருமதி செல்வேஸ்வரி [சவூதிஅரேபியா], திரு.ஆனந்தன் [ஆசிரியர், மன் / முருங்கன் ம. வி.], திரு. தர்மபாபு [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-08-90 [இன்று] நடைபெறும். உற்றார், உறவினர்கள் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திரு. செல்லையா செகராஜசிங்கம்,

117/6, அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(14096)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஈழப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இந்திய அரசு காண வேண்டும்

## தமிழக சட்டசபையில் ஏகமனதாகக் கோரிக்கை

சென்னை, ஆக. 24

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே பேச்சு வார்த்தை நடைபெறும் பட்சத்தில் —

அந்தநேரத்தைப் பயன்படுத்தி பிறநாடுகளிடம் இருந்து ஆயுதங்களை வாங்கித் தன்னைப் பலப்படுத்திக்கொள்ளக்கூடாது என்ற உத்தரவாதத்தை இலங்கை அரசிடமிருந்து இந்திய மத்திய அரசு பெற்றுக் கொள்ளவேண்டும்.

அதேவேளை -

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இந்திய அரசு அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும்.

தமிழகத்துக்கு அகதிகளாக வந்த ஈழத்தமிழர் தமது தாயகத்துக்கு திரும்பக்கூடிய அமைதியான சூழ்நிலை ஏற்படுவதையும் இந்தியா உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு மத்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை தமிழ்நாடு சட்டசபை நேற்று ஏகமனதாக நிறைவேற்றியது.

பிரஸ்தாப தீர்மானத்தை தி. மு. க. சார்பில் முதலமைச்சர் கருணாநிதி கொண்டுவந்தார்.

இத்தீர்மானத்துக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸியகட்சி ஆகியன கொண்டு வந்த திருத்தங்கள் பின்னர் வாபஸ்வாங்கப்பட்டன.

தி மு. கவின் மூலப் பிரேரணை பின்னர் ஏகமனதாக சட்டசபையில் நிறைவேற்றப் பட்டது.

### பேச்சுத் தேவை

பிரேரணையைச் சமர்ப்பித்து பேசுகையில் திரு. கருணாநிதி சொன்னதாவது:

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையே மீண்டும் பேச்சுக்களை நடத்த இந்திய மத்திய அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

ஈழத்தில் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவதையும்-

தமிழகத்தில் அகதிகள் வந்து குவியும் வண்ணம் தனது நாட்டின் ஒரு பகுதி மக்கள் மீது இலங்கை அரசு தனது இராணுவத்தைக் கொண்டுஆக்கிரமிப்புச்செயல்களைக் கட்டவிழ்த்து விடுவதையும் இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

### சிங்குடன் சந்திப்பு

மத்திய அமைச்சர் திரு. முரசொலிமாறன் தலைமையில் ஒரு தூதுக்குழு வியாழக்கிழமை புதுடில்லியில் பிரதமர் வி. பி. சிங்கைச் சந்தித்து இலங்கைத் தமிழர் நிலை பற்றிப் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறது.

அந்தத் தூதுக்குழுவில் தி. மு. க. எம். பிக்கள் அங்கம் வகித்தனர்.

பிரதமர் சிங் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து வருகிறார்— என்றார். (அ-எ)

# காரைநகரில் முன்னேறிய பகுதிகளில் இராணுவம்

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்று முன்தினம்அதிகாலை முன்னேறிய இராணுவம் நேற்றிரவு வரை முன்னேறிய இடங்களில்— பாலாவோடைப் பகுதியில் —தொடர்ந்து நிலை கொண்டிருந்தது.

அப்பகுதியில் ஐந்துக்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதாகவும்—

ஐந்துக்கும் அதிகமானோர் காணாமற் போயிருப்பதாகவும் தெரியவந்திருக்கிறது.

இராணுவம் நிலை கொண்டிருக்கும் பகுதிகளுடன் நேரடியான தொடர்பு ஏதும் இல்லாததால் அப் பகுதியில் உயிரிழந்தோர் மற்றும் காணாமற் போயிருப்போரின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கக்கூடும் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம்—

முன்னேறிய இராணுவத்தினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்ட வங்கி ஊழியர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

படையினரால் பிடிக்கப்பட்டு கைகள் கட்டப்பட்ட நிலையில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த நடராசா என்பவரும் நேற்று விடுவிக்கப்பட்டார்.

புகையிலை ஏற்றி வந்த லொறி ஒன்றும் அப் பகுதியில் தீக்கிரையாகிக் கிடந்தது. இந்த லொறியின் சாரதிக்கும் கிளினருக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இதே சமயம் படையினர் முன்னேறியிருக்கும் சாந்திபுரத்தில் கரையோரப் பகுதியில் நேற்று பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

வாரிவளவுப் பகுதியில் கடற்பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி நேற்று இரண்டு பேர் காயமுற்றனர்.

நாராயணன் என்ற வயோதிபர் அருகில் விழுந்து வெடித்த பீரங்கிக் குண்டின் சத்தத்தினால் அதிர்ச்சியுற்று மரணமானதாகவும் தெரிய வந்தது.

காரைநகரில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து அப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களில் பெரும்பான்மையானோர் அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். (உ-5

# உணவருந்தும் வேளையில் எமனாக வந்த றொக்கட்!

யாழ்ப்பாணம், ஆக. 24

ஓர் இளம்தாய் தனது பிள்ளைகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தவேளை ஹெலியின் றொக்கெட் பிள்ளைகளில் ஒன்றுக்கு எமனாகியது.

இந்தப் பரிதாப சம்பவம் நேற்று நண்பகல் 12-45 மணியளவில்யாழ்ப்பாணம்கன்னாதிட்டியில் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து அறிய வந்ததாவது:-

தாயாரான சின்னத்தம்பி சகலகலாதேவி (35 வயது) தமதுவீட்டுக் குசினிக்குள் வைத்துத் தமது இரண்டு பிள்ளைகளுக்கும் மதிய உணவு ஊட்டிக்கொண்டிருந்தார்.

அப்போது வீட்டுக்கும் குசினிக்கும் இடையில் ஹெலியின் றொக்கெட் வேட்டு திடீரென வந்து விழுந்து வெடித்துச் சிதறியது.

ராஜ்குமார் என்ற நான்கு வயதுக் குழந்தை தலையில் காயம் ஏற்பட்டு உடனேயே இறந்துபோனது. தாயாருக்கும், மற்றப் பிள்ளையான தனேஷ்குமார் [6வயது], புஷ்பவதி [வயது 65] ஆகியோர் காயமுற்றனர். அவர்கள் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரைக் காணவில்லை

காரைநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும் மற்றும் இருவருமாக ஐவர் காணாமல் போய் விட்டனர் என்று கூறப்படுகிறது.

பரமு ஆறுமுகம் [ஆசிரியர்], அவர் மனைவி, பேரப் பிள்ளையான திருமகள்(வயது 28) மற்றும் தம்பன், கந்தையா ஆகியோரே காணாமற் போனவர்கள் ஆவர்.

இதேவேளை, நேற்று முன் தினம் காரைநகரில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது கொல்லப்பட்டவர்களில் கோபாலபிள்ளை,பொன்னம்பலம் ஆகிய இருவரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5-ரி)

# மாங்குளம் தாக்குதலில் நான்கு சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 24

மாங்குளத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவங்களில் மொத்தம் நான்கு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை நேற்று முன் தினம் முகாமிற்குப் பின்புறமாக ஓர் இடத்தில் விடுதலைப் புலிகள் புலிக் கொடி ஒன்றினைப் பறக்க விட்டதாகவும் இதனை அறிந்த இராணுவத்தினர் நேற்று அவ்விடத்திற்கு வந்தபோது அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அறிய வருகிறது. அப்போது இருவர் கொல்லப்பட்டனர்.

பின்னர் முகாமிலிருந்து கண்டி வீதி வழியாக வெளியேறியபோதும் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். அப்போது 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். [அ-5]

## சென்னை---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிறுத்தும்படி ஸ்ரீலங்கா அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும்.

● ஈழத்தில் நடைபெறும் சண்டையில் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இந்தியா உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை அனுப்ப வேண்டும்.

● தமிழகத்துக்கு அகதியாக வரவிரும்பும் ஈழத்தமிழரை ஏற்றிவர கப்பல் வசதிகளை இந்தியா ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளை [illegible] விரதம் மேற்கொள்ளப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org